பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 24 சனிக்கிழமை (10-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 334

தீபாவளியை முன்னிட்டு
அனைத்து
ஆடைத் தெரிவுகளும்
விசேடமலிவு விலையில்
காவேரி
சில்க்ஸில்
48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்
T. P 2333
(சி-2854)

## ● விசேட இராணுவப் பயிற்சி வழங்கி
# என்னைக் கொலைசெய்ய
# திரைமறைவில் சதித்திட்டம்

## ரணில் விக்கிரமசிங்கா தகவல்

(நமது நிருபர்)

என்னைப் படுகொலை செய்வதற்கான முயற்சிகள் திரை மறைவில் இடம் பெறும் தகவல்கள் நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து விலகி தமிழ்க் கட்சி ஒன்றிடம் சரணடைந்த நான்கு தமிழ் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து என்னைக் கொல்லுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்கா நேற்று நடமாடும் வெளிநாட்டு பத்திரிகைகளுடன் நடத்திய மகாநாடு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று நடமாடும் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை நடத்தினார்:

அந்த மகாநாட்டிலேயே தன்னைக் கொல்ல முயற்சி நடப்பதாகத் தகவல் வெளியிட்டார்:

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து தப்பிச்சென்ற நான்கு தமிழ் இளைஞர்கள் தமிழ்க்கட்சி ஒன்றிடம் சரணடைந்தனர் அவர்களுக்கு இராணுவ புலனாய்வுத்துறையினர் நவீனஆயுதங்கள் மற்றும் வெடி மருந்து வகைகளைக் கையாள்வது தொடர்பாக இரகசியப்பயிற்சியை அளித்துள்ளனர்

இதேவேளை எனக்கு விடுதலைப் புலிகளால் கொலைப் பயமுறுத்தல் இருப்பதாகவும் இராணுவப்புலனாய்வுப்பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

8 -ம் பக்கம் பார்க்க

## ரூபவாஹினிப்பணிப்பாளர் இராஜினாமா செய்தார்

ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சரத்குணசிங்க தனது பதவியிலிருந்து நேற்று இராஜினாமாச் செய்துள்ளார்.

ரூபவாஹினி தொலைக்காட்சி சேவை எதிர்க்கட்சிகளுக்கு எதிராகப்பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருவதை அடுத்தே இவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். (ந-5)

## ஈ.பி.டி.பி.யின் வேட்புமனுவை நீக்கக்கோரி மேல் நீதிமன்றில் மனு

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஈ.பி.டி.பி தாக்கல் செய்த வேட்பு மனுவை நிராகரிக்குமாறு கோரி கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று மனு வொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவினை வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் என். கே சிவாஜிலிங்கம் தாக்கல் செய்துள்ளார். வேட்பு மனுக்களில் வேட்பாளர்களின் சத்தியக் கடதாசி சமர்ப்பித்தது தவறு என்றும் எனவே இந்த வேட்பு மனுவை நிராகரிக்க வேண்டுமென்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது

மனுத்தாக்கல் தொடர்பான விவாதம் எதிர்வரும் 13ம் திகதி நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி ஆர்.இ. தம்பிரட்ணம், எ. வி. பெரியநாயகம் ஆகியோர் மனுவுக்கு ஆதரவாக ஆஜராகவுள்ளனர். (இ)

## காயமடைந்த சிப்பாய் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம்நாகர்கோவில் பகுதியில் இடம் பெற்ற ஷெல் தாக்குதல் ஒன்றில் படுகாயமடைந்து கொழும்புவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். லான்ஸ் கோப்ரல் ஐ.ஈ.என்.ரி கே பண்டார என்ற சிப்பாயே உயிரிழந்ததாகபருத்தித்துறை மாவட்ட நீதிமன்றிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-23)

## படையினரின் சூட்டுக்கு இளைஞர் ஒருவர் பலி
### அல்லாரையில் சம்பவம்

(மந்திகை)

அல்லாரை அம்மன்கோவிலடிப்பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி இளைஞர்ஒருவர் உயிரிழந்துள்ளார்;

நேற்றுமுன்தினம் இரவு11 மணியளவில்கிரனேட்டை வீசிவிட்டு தப்பியோட முற்பட்ட இளைஞன் மீதுதாம் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டபோது அவர் உயிரிழந்ததாகப் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் 3படையினர் காயமடைந்ததாக கொடிகாமம் பொலிசார் தெரிவித்தனர்.

மேற்படிசம்பவத்தில் உயிரிழந்த இளைஞனின் சடலம் யாழ்போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அல்லாரைப்

(2-ம் பக்கம் பார்க்க)

## கனடாவில் புலிகளுக்கு தடை?

லண்டன்

கனடா தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக பட்டியல் படுத்தி தடை செய்துள்ளதென்று லண்டன் பி பி சி நேற்றிரவு தகவல் வெளியிட்டது.

எனினும் இலங்கைக்கான கனடாத் தூதரகம் இதனை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. (ந)

## வவுனியாவில் இரண்டு மாணவிகளை காணவில்லை

(வவுனியா)

வவுனியாவில் உள்ள இரண்டு பிரபல கல்லூரியில்கல்வி கற்கும் இரண்டு மாணவிகளைக் காணவில்லையென வவுனியா மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

காணாமற் போன இரண்டு மாணவிகளும் கடந்த 5ம் திகதி பருவகாலச் சீட்டு எடுப்பதற்காக வவுனியா பஸ்நிலையத்திற்குச் சென்றவர்கள் திரும்பவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## அச்சுவேலி நகர பகுதியில் கைக்குண்டு கண்டெடுப்பு

(நவக்கிரி)

நேற்றைய தினம் அதிகாலை வேளை அச்சுவேலி பஸ் நிலையம் அருகே காணப்பட்ட கைக்குண்டொன்றினால் அப்பகுதி பெரும் பரபரப்புக்குள்ளானது.

பிரதேச சபை உப அலுவலகம், மக்கள் வங்கி ஆகியன

(8ம் பக்கம் பார்க்க)

## எஸ். பி. திஸநாயக்கா மன்னிப்புக் கோரினார்

(கொழும்பு)

ஜனாதிபதியை அவமதிக்கும் வகையில் தகாதவார்த்தைப் பிரயோகத்தைப் மேற்கொண்டிருந்தால் அதற்கு மன்னிப்பு கோருவதாக எஸ். பி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதி தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் நாட்டிலுள்ள பெண்களின் மனதைப் புண்படுத்துமாயின் அதற்காகத்தான் மன்னிப்புக் கோருவதாகவும் தெரிவித்துள்ளார்,

ஜனாதிபதியை அவமதிக்கும் வகையில் எஸ். பி. திஸநாயக்கா தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டுவருவதைக் கண்டித்து கடந்த செவ்வாய்க்கிழமைசிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மகளிர் அணியினர் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியமை தெரிந்ததே. (ந-4)

## சுன்னாகப் பெண் கொழும்பில் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தற்கொலைப்போராளிஎன்ற சந்தேகத்தின் பேரில் சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த இராமலிங்கம் திருமகள் (வயது 42) என்ற பெண்மணி கொழும்பு கல்கிசை பயங்கரவாததடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளாரென்று பயங்கரவாத தடுப்புப் பிரிவின் இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார். (இ)

## பொலிசார் சென்ற ஜீப்வண்டி மீது நேற்று தற்கொலைத் தாக்குதல்

[மட்டக்களப்பு]

பொலிசார் பயணம் செய்த ஜீப் வண்டி மீதுதற்கொலைப் போராளி பாய்ந்து குண்டை வெடிக்கவைத்ததினால் அதில் பயணம்செய்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளனர்:

இத்தாக்குதல் சம்பவம் நேற்றுக்காலை 9.45 மணியளவில் மட்டக்களப்புவாழைச்சேனை இந்துக் கல்லூரிக்கு அருகில் இடம் பெற்றது.

தோளில் பையொன்றைச் சுமந்து கொண்டு வீதி வழியே வந்து கொண்டிருந்த நபர் ஒருவர் எதிரே வந்து கொண்டிருந்த ஜீப்வண்டி மீது பாய்ந்து குண்டை வெடிக்க வைத்தாரென்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் சம்பவத்தில் கலகுடா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வனசிங்கா வும் காயமடைந்தவர்களில் ஒருவராவார்.

தற்கொலையாளியின் சடலம் மீட்கப்பட்டு வாழைச்சேனை மாவட்ட வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது: [இ-5]

**தமிழீழப்...**

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தேச ரீதியாக பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துவதற்கு இவர்களின் பிளவுகள் சாதகமாக அமைந்தன.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும் அவர்களின் போராட்டத்திற்கு வலுவூட்டவும் தமிழர் கூட்டமைப்பு தேர்தலின் பின்பும் தொடர்ந்து செயற்படும்.

எனவே கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டிய கடப்பாடு தமிழ் மக்களுக்கு இருக்கிறது. அற்ப சொற்ப சலுகைகளுக்காக விலைபோகாது விடுதலையை நோக்கமாகக் கொண்டு வாக்களிக்க வேண்டும்.

நூறு வீத வாக்குப்பதிவு இங்கு நடைபெறுமானால் முழுப் பிரதிநிதித்துவமும் கூட்டமைப்புக்கே கிடைக்கும். முழுமையான வாக்குப் பதிவு நடைபெறுவதனை உறுதிப்படுத்த இங்குள்ள புத்தி ஜீவிகளின் அழுத்தம் இன்றியமையாதது.

கடந்த காலத்தில் அரசு புலிகளுடன் யுத்தத்தை நடத்திக்கொண்டு ஏனைய கட்சிகளுடன் பேசிகபட நாடகம் ஆடியதனால் சமாதானத்தை உருவாக்குவதில் இடைஞ்சல் ஏற்பட்டது.

எமது கட்சி கடந்த பத்து வருட காலத்தில் அரசுடனோ இராணுவத்துடனோ சேர்ந்து இயங்கியது கிடையாது. பாராளுமன்றில் அங்கத்துவம் வகித்த காலத்திலும் அவசர காலச் சட்டத்திற்கு எதிராகவே வாக்களித்தோம்

மேலும் பத்து கட்சிகளின் கூட்டமைப்பில் இணைந்து தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகப் போராடினோம். அதனால் தமிழர் கூட்டமைப்பில் சேருகின்ற முழுத் தகுதியும் எமக்கு ஏற்பட்டது.

நாட்டில் வலுவான பிரதிநிதித்துவம் எமக்குக் கிடைக்குமானால் தேர்தலின் பின்பு பதவிக்கு வரும் அரசுக்கு புலிகளுடன் பேசவேண்டியதன் அவசியத்தை ஆணித்தரமாக இடித்துக் கூறும் சக்தி ஏற்படும் என்றார். (உ-10,106)

**படையினர்**

பகுதி இராணுவத்தினரால் நேற்றுக்காலை 8 மணிமுதல் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. (ந-23-10)


## அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டக்கூட்டுறவுச்சபை ஊழியர் நலன்புரிச்சங்கத்தினால் இன்று (10-11 2001) அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளது. சீட்டிழுப்பு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை,
ஊழியர் நலன்புரிச்சங்கம். (3945)

## மக்கள் குறைநிவிர்த்தி சேவை மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் நடமாடும் சேவை

## துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 10ம் 11ம் திகதிகளில் நடைபெறவுள்ள மக்கள குறைநிவிர்த்தி சேவையில் கலந்துகொள்ள வருபவர்களின் துவிச்சக்கரவண்டிகள் பாதுகாப்பாக நிறுத்தி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதற்காக பிரதான வீதியில் பழைய மாநகர சபை வளவிற்கு முன்பாகவுள்ள பகுதியிலும் மத்திய கல்லூரிக்கு மேற்காக பொது நூலகத்திற்கும், மத்திய கல்லூரிக்கும் இடையிலுள்ள வீதியிலும் பாதுகாப்பாக துவிச்சக்கர வண்டிகள் நிறுத்திவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதற்காக பிரதான வீதியில் பழைய மாநகர சபை வளவிற்கு முன்பாகவுள்ள பகுதியிலும் மத்திய கல்லூரிக்கு மேற்காக பொது நூலகத்திற்கும், மத்திய கல்லூரிக்கும் இடையிலுள்ள வீதியிலும் பாதுகாப்பாக துச்சக்கர வண்டிகளை நிறுத்திவைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

செயலாளர்
வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

(2844)

## வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு

= = = = = = = = = = = = =

### மக்கள் குறைநிவிர்த்தி சேவை, மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் நடமாடும் சேவை

= = = = = = = = = = = = =

## பஸ் போக்குவரத்து

யாழ்ப்பாணம் நகரத்தை நோக்கி வரும் பேருந்து சபையின் வண்டிகள் அனைத்தும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள மக்கள் குறைநிவிர்த்தி சேவையை முன்னிட்டு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர்கல்லூரி சந்தி ஊடாக மத்திய கல்லூரி மைதானம் வரை சேவையை நடத்தவுள்ளன

எனவே மக்கள் குறைநிவிர்த்தி சேவையில் கலந்துகொள்வதற்காக வரும் பயணிகள் நேரடியாக மத்திய கல்லூரிமைதானம் வரை பயணம் செய்ய முடியும்

செயலாளர்,
வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு,
புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு
தமிழ் விவகாரங்கள் அமைச்சு.

(கி 2843)

## பொதுத்தேர்தல் - 2001
## ஐக்கிய தேசியக் கட்சியின்
# மாபெரும் பிரசாரக்கூட்டம்

தலைமை: தியாகராசபிள்ளை மாணிக்கதியாகராஜ செல்வராசா [சித்தியார்]
(மானிப்பாய்த் தொகுதி வேட்பாளர்)

சிறப்புரை: **திரு. T. மகேஸ்வரன்**
(ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முதன்மை வேட்பாளரும்)

இடம்: **சிவன் கோவிலடி (சுன்னாகம்)**

காலம்: **10-11-2001 இன்று (சனிக்கிழமை)**

நேரம்: **மாலை 4.00 - 7.00 மணிவரை**

= = = = = = = = = = = = = = = = = = = =

**அனைத்து ஆதரவாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்**

= = = = = = = = = = = = = = = = = = = =

T. மகேஸ்வரன்
முதன்மை வேட்பாளர்
ஐக்கிய தேசியக் கட்சி

(கி-2856)

# சம்பந்தர் மருத்துவமனை

**60, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.**

★ வார்ட் (WARD) வசதிகள்
★ O.P.D. (வெளிநோயாளர் சிகிச்சை காலை 8 மணி முதல் இரவு 9 மணிவரையும்
★ வைத்திய நிபுணர்கள்சேவை (Specialist Consultation) மாலை 4 மணிக்குப்பின்
★ E.C.G., NEBULIZER (ஆஸ்த்மாவுக்கு புகை பிடித்தல்)
★ வார்ட்டில் தங்கும் நோயாளர்களை வைத்திய நிபுணர்கள் (Specialist) பார்வையிடுவர்.

**விசேடமாக**

- முதியோர்கள் வைத்தியம், உணவு ஆகியவற்றுடன் கூடிய பராமரிப்பு
- நோய் உள்ள முதியோர்கள்
- நோய் அற்ற முதியோர்கள்

இரு பாலாரும் அனுமதிக்கப்படுவர்.

மேலதிக விவரங்களுக்கு

**SAMPANTHAR MODERN HEALTH CARE**

No. 60, ArasadyRd (Near Thaddatheru Junction) JAFFNA. (C2851)

## எம் எதிர்காலம் பற்றி சிந்திப்பதை விடுத்து
# தமிழர் பட்ட துன்பங்கள் குறித்தே
# இனியும் கதைப்பது மடைமைத்தனம்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரை

[தென்மராட்சி]

முன்னைய காலங்களில் தமிழ்த் தலைவர்கள் எங்களுடைய் துன்பங்களைப்பற்றிக் கதைத்தார்கள். இன்றைக்கு நாங்கள் எங்களுடைய விடுதலையைப்பற்றியும் அபிலாசையைப் பற்றியும் கதைக்கிறோம் 52 வருடங்களின் பின்னரும் தமிழ்மக்களின் துன்பங்களைப் பற்றிக் கதைப்பது மடைமைத்தனம்.

இன்று நாம் எமது எதிர்காலத்தைப் பற்றித் தான் சிந்திக்கவேண்டும். நாங்கள் எல்லோரும் ஒரு தனித்தேசிய இனம் எங்களுக்கென்று இத்தீவிலே ஒரு தாயகம் சுய நிர்ணய உரிமை வேண்டும். இது தான் எமது அபிலாஷை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்றால் இந்த அபிலாஷை பற்றித்தான் பேசவேண்டும்.

இவ்வாறு யாழ் தேர்தல் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் போட்டியிடும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று முன்தினம் மாலை குருநகரில் நடத்தப்பட்ட முதலாவது பிரசாரக்கூட்டத்தில் கன்னி உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.



குருநகரில் அமைக்கப்பட்டிருந்த அமரர் ஜீ ஜீ பொன்னம்பலத்தின் சிலையருகில், யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் தபிலிப் தலைமையில் அமரரின் 100 வதுபிறந்ததினவிழாவும் தேர்தல் பிரசாரக்கூட்டமும் நடைபெற்றது.

அமரர் ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் சிலைக்கு வேட்பாளர்கள் மற்றும் பிரமுகர்களும் மாலைகள் அணிவித்தனர்.

இக்கூட்டத்தில்வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

கடந்த 52 வருடங்களாக பாராளுமன்றத்துக்கு நாங்கள் அனுப்பிய உறுப்பினர்கள் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வும் காணவில்லை எங்களுடைய இனப்பிரச்சினையை உலகத்துக்கு எடுத்துக்கூறியது தமிழீழ விடுதலைப்புலிகள் மாத்திரம் தான். ஆகையால் அவர்களை நாம் மதிக்கவேண்டும். அவர்களுக்குரிய அந்தஸ்தைக் கொடுக்கவேண்டும்.

1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிகா புலிகளுடன் கதைத்து தமிழர் பிரச்சினைக்குத்தீர்வுகாண்பேன். சமாதானத்தைக் கொண்டுவருவேன் என்றார் ஆனால் நடந்தது என்ன? சமாதானம வரவில்லை. பிரச்சினையும் தீரவில்லை

இந்தநிலையில்தான் பாராளுமன்றத்தில் இருந்த மற்றைய தமிழ்க்கட்சிகள் தவறுகளை இழைத்துள்ளன. ஐந்து வருடங்களாக இவை அரசுடன் கதைத்தபின்னரும் எங்கே அந்தத் தீர்வு? அந்தத்தீர்வு ஒருநாளும் வராது.

இன்றைய உலகசூழ்நிலை என்ன? முழு உலகமும் பயங்கரவாதம்பற்றியே பேசுகின்றது ஆனால் இங்கு நடப்பது பயங்கரவாதம்அல்ல. தேசிய விடுதலைக்கான யுத்தம் விடுதலையுத்தம் அதைநாம் முழு உலகத்துக்கும் கூறவேண்டும் ஆகையால் தான்நான்குகட்சிகள் கூட்டமைப்பிலுள்ள நாம் எமது வேறுபாடுகளை மறந்து ஒன்று சேர்ந்திருக்கிறோம்.

அந்த ஒன்றுசேர்ப்புக்கு ஒரேகாரணம் தான் உண்டு; அதாவது தமிழ்த்தேசிய இனைப்பிரச்சினை பற்றிப் பேசுவதாயின் புலிகளுடன் மட்டும்தான் நீங்கள் கதைக்க வேண்டும்.

வேறுஒரு கட்சிகளுடனும் கதைக்ககூடாது. எங்களுடன்எந்தவொருஅரசாங்கமும இனப்பிரச்சினை பற்றிக் கதைக்கவந்தால் - நாம கதைக்கமாட்டோம். அந்த உறுதியை இன்று கொடுக்கிறோம்என்றார்.

இந்நிகழ்வில் கட்சியின் வேட்பாளர்களான சீ. வி, கே சிவஞானம். அ. விநாயகமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர். (உ-77)

## முன்னாள் துணைவேந்தர்
# துரைராசாவின் 68 வது பிறந்ததின நிகழ்வுகள்

[யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராசாவின் 68 வது பிறந்த தின விழாவை முன்னிட்டு இன்று மு.ப 10 30 மணியளவில பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

அதேவேளைஎதிர்வரும் 12ந் திகதி பி.ப, 3 30 மணிக்கு புவியியல் துறை மண்டபத்தில் நினைவுப் பேருரை இடம் பெறவுள்ளது:

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில். நினைவுப் பேருரையை உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளார். [உ].

# மாகாண மட்ட சமூகக்கல்விப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயம் நடத்தும் மாவட்ட மட்ட சமூகக்கல்விப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஸ்தான சி. சி. த. க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி இடம்பெறவுள்ள நேரவிபரம் வருமாறு, தரம் 6,7,8,9- மு ப 10·00 10.30 மணி வரை. தரம் 10,11 -மு ப 10-11 மணி வரை. தரம் 12,13- மு.ப 10-12 மணிவரைபோட்டிகள் நடைபெறவுள்ளன. (உ-9)

# மாத்தளை நகரில் ஒன்பது தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

மாத்தளை நகரில் அண்மையில் பொலிஸார் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது 9 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய அடையாள அட்டை வைத்திருக்காமையினாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனரென்றும், தொடர்ந்தும் மாத்தளை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் நகரிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளில் வேலை செய்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

# விடுதலைப் புலிகளின் தமிழீழப்போராட்டத்தை வலுப்படுத்த ஜனநாயக ரீதியில்தோள்கொடுப்போம்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் உறுதியுரை

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதால் தான் இந்த நாட்டில் யுத்தம் நிறுத்தப்படவும் தீர்வொன்று ஏற்படவும் முடியும். பாராளுமன்றத்திற்குத்தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் புலிகளுடன் பேசக்கூடிய களத்தை உருவாக்கிக் கொடுத்து எமது விடுதலைப் போராட்டத்தின்நியாயத்தை சர்வதேச ரீதியில் வெளிப்படுத்த வேண்டும்.

அந்த வகையில் நான்கு கட்சிகள் ஒன்றுபட்டுள்ள தமிழர் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை வலுப்படுத்த ஜனநாயக ரீதியாக செயற்படும் என்பதை சர்வதேசம் உணர்ந்துள்ளது.

ஈ பி ஆர் எல்:எவ் (சுரேஸ் அணி)யின் தலைவரும் தமிழர் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளருமான சுரேஸ்பிரேமச்சந்திரன் நேற்று யாழ் நகரில் தாம் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்

தமதுநிலைப்பாடு தொடர்பாக அவர் அங்கு மேலும் விளக்கமளிக்கையில்;

கடந்த காலங்களில் தமிழ்க் கட்சிகள் பிரிந்து செயற்பட்டதனால் அரசே இலாபம் அடைந்தது. புலிகளை சர்வ

(2ம் பக்கம் பார்க்க)


மலரும்தீபாவளி என்றும் மனதில் ஒளிவீச வாழ்த்துகின்றோம்

தினம் தினம் புதுமையுடன் மலரும்
நாகரிக உலகின் புதுமைமிகு புத்தம்புதிய புடைவைகளை
அறிமுகமாக்கித் தன்னிகரில்லாது விளங்கும்

ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ

வாடிக்கையாளர், நண்பர்கள், ஆதரவாளர்களின் இடவசதி கருதி,

இல. 79, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரியில் எமது கிளை ஸ்தாபனம் 5.11.2001 திங்கள் முதல்
இயங்குகின்றது என்பதை அனைவருக்கும்
மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்
உங்கள் ஆதரவை நாடும்.

ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ


இல- 13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம்

இல. 79, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

[சி/2855]


## என்றும் மறக்கப்பட முடியாதவர்
# முன்னாள் துணைவேந்தர்

இன்று அமரர் பேராசிரியர் அ. துரைராசாவின் 68வது பிறந்த தினத்தை ஒட்டிப் பிரசுரமாகிறது.



இன்றுஅமரர் பேராசிரியர் அ.துரைராசாவின்68வதுபிறந்ததினமாகும். அவர் மறைந்து ஏழுஆண்டுகள் கடந்து செல்கின்றன. வாழும்போதுபலராலும் விமர்சிக்கப்படும்மரணத்தின் போதுபோற்றப்படுவார்; இது மரணத்தால் ஏற்படும் ஒரு நன்மை: ஆனால் அமரர் துரைராசா என்றுமே எல்லோராலும் போற்றப்பட்ட ஒப்பற்றநல்ல மனிதர். அவருக்கே இயல்பான அன்பு, அறிவு, அடக்கம், ஆற்றல் நேர்மை, கடமை, மனிதநேயம் அவரை உயர்ந்தநிலையில் வைத்து எல்லோராலும் மதிக்கச் செய்தன. ஆரவாரமின்றி இன, மத வேறுபாடுகளைக்கடந்து விசுவாசம்மிக்க நிலையான மாணவபரம்பரையை உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு தன்பதவியை தன் சுய விளம்பரத்திற்காகபயனபடுத்தியது கிடையாது: அதே வேளை மக்களுக்குப் பயனுள்ள சமூக நிகழ்வுகளில் இருந்து அவர் விலகியதும் கிடையாது. பல்கலைக்கழகத்தில் மூப்பு இளமை பாராது. தொழில் வேறுபாடு காணாது எல்லோரையும்இன் சொல்லால் வழி நடத்திய பெருமை அவருக்கே உள்ள

### கலாநிதி ப. புஷ்பரட்ணம்

யாழ்: பல்கலைக்கழகம்)

இயல்பு தன் மரணத்தின்நாட்களைத் தானே எண்ணிக் கொண்டு புன்சிரிப்போடு துணைவேந்தர் பதவிக்குப் பெருமை தேடிக்கொடுத்தவர் அமரர்துரைராசா. தந்தை செல்வாவின் மரணத்திற்குப் பின்னர் தமிழ்ச் சமூகமும் அதுவும் ஒரு கல்வியாளனுக்காகக் கண்ணீர் வடித்த தென்றால் அமரர் துரைராசாவின் மரணத்தில் என்றே கூறலாம். அவர் நினைவு என்றும் நிலைக்கட்டும்.

## மாதாந்த கொடுப்பனவு

(துன்னாலை)

பருத்தித்துறை பிரதேச செயலர்பிரிவில் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள், புற்றுநோய், தொழுநோய் என்பனவற்றுக்கான உதவிக் கொடுப்பனவுகள் ஆகியவற்றை இம்மாதம் 15-25 ஆம திகதிக்கிடையில் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் ஆ சிவசுவாமி தெரிவித்துள்ளார். (செ-41)

## நிதி சேகரிப்பு

(புத்தூர்)

புத்தூர் மத்திய மருந்தகத்திற்கு வேண்டிய மேலதிக காணிக் கொள்வனவுக்கு வேண்டிய நிதியை, வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பொது மக்களிடம் இருந்து சேகரித்து வருகின்றனர். (உ-235)

## வினாப்பத்திரம் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

தரம் 3-5 வரையான விஞ்ஞான பாடத்திற்கான செயல முறைப்பரீட்சை வினாப்பத்திரங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சை ஆயத்தங்களைப் பாடசாலைகள் மேற்கொள்ளலாம் எனவும் யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்;

[உ-9]

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

[மானிப்பாய்]

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைக்கப்பட்ட கிராமியசைப் பணியாளர் அபிவிருத்திச் சங்கத்தினால் இன்று சனிக்கிழமை மானிப்பாய் பிரதேசசபை நவீந்திரன் கலாசார மண்டபத்தில் நடத்தப்படவிருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் சி மகாலிங்கம் தெரிவித்துள்ளார்,

(உ-232)

## விபரங்களை ஒப்படைக்குக

[யாழ்ப்பாணம்]

தொழிற்பயிற்சி அமைச்சினால் போதனாசிரியர் தெரிவுக்கான ஆட்சேர்த்தல் போட்டிப் பரீட்சைக்கு அனுமதி அட்டை கிடைத்தும் பரீட்சைக்குத் தோற்றாதவர்களை மாற்று ஏற்பாட்டின் பொருட்டு பரீட்சை அனுமதி அட்டையின் போட்டோப்பிரதியுடன் விபரங்களை யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க அலுவலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் ஒப்படைக்குப்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## அமைச்சர் டக்ளஸ் பதிலளிப்பார்

யாழ் குடாநாட்டில்வாழும் மக்கள அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் தொடர்பாக எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வானொலி மூலம் பதிலளிக்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் சேவையில எதிர்வரும் 18ம் திகதியன்று நேரடியாக மு; ப: 10மணி முதல் நண்பகல் 12 மணிவரை ஒலிபரப்பப்படவுள்ள இந் நிகழ்ச்சியில் தொலைபேசி மூலம் கேள்விகள் எழுப்பப்பட வசதி செய்யப்பட்டுள்ளது; இந் நிகழ்ச்சிக்காக 3722. 3733, 3724 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமெனஈ;பி.டி பியின் தகவல் தொடர்புத் துறை செயலர் க.திவாகர்

## இராசி பலன்

10-11-2001
ஐப்பசி 24, சனி
தசமி மு இ. 10.50 வரை
பூரம் பி. இ. 2 50 வரை
இராகுகாலம் 9 05-10 35
சுபநேரம் 3 05 4 35

**மேடம்**
வியாபாரநன்மை, காரிய இடையூறு, மனப்பற்றம், உடல்வயாதி.

**இடபம்**
தன்னம்பிக்கை குறைவு, காரியஅனுகூலம், பெரியோர் மனஸ்தாபம், கல்விச்சிறப்பு.

**மிதுனம்**
வாக்குப்பலிதம், முயற்சி கைகூடும். குடும்பசுகம், புதிய பொருள் சேர்க்கை.

**கடகம்**
வீண்செலவு, காரியதாமதம், தேவையற்ற வார்த்தை, கௌரவக்குறைவு.

**சிங்கம்**
ஜனவசியம், நண்பர்கள் உதவி, சயனசுகம், முயற்சி கைகூடும்.

**கன்னி**
பிரயாணம், உணர்ச்சிவசப்படல், காரியதாமதம், தன விரயம்.

**துலாம்**
நண்பர்கள் உதவி, பொருள் வரவு, தொழில்சிந்தை, மதிக்கப்படுதல்.

**விருச்சிகம்**
தூரதேசச்செய்தி, கடின உழைப்பு. மேன்மை, காரியம் கைகூடும.

**தனுசு**
புதியதிருப்பம், வீண்பயம், கட்டுப்படுதல், வயிற்றுக் கோளாறு.

**மகரம்**
துயரம், காரியத்தடங்கல், போசனசுகம், மனஸ்தாபம்.

**கும்பம்**
அபூர்வசந்திப்பு, ஸ்திரசுகம், காரியம்கைகூடும், வாகனவசதி.

**மீனம்**
சத்துருஜெயம், ஆரோக்கியம், தொழில்விருத்தி, உறவினர் வரவேற்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது) [வளவன்]

## அகண்ட பஜனை

(யாழ்ப்பாணம)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தி சாயி சேவா நிலையத்தில நாளை ஞாயிற்றுக்கிழமை அகில உலக அகண்ட பஜனை நிகழ்வுகள் நடைபெறவுளது. (செ-104)

## நஞ்சருந்திய குடும்பப்பெண்

(நவக்கிரி)

கணவனுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக கரந்தன் நீர்வேலியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளுக்குத்தாயான குடும்பப் பெண்கடந்த ஞாயிற்றுக் கிழமைநஞ்சருந்தி ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். (எ-233)

## மைற்ஸ்நோய் தாக்கம் கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம)

யாழ் மாவட்டத்தில் தென்னை அபிவிருத்திச்சபையால் மேற்கொள்ளப்பட்ட மைற்ஸ்நோய்கட்டுப்படுத்தல் 85% வெற்றியளித்துள்ளதாக தென்னை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 14பிரதேச செயலர் பிரிவுகளுக்கே இவ்வாறு கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக மைற்ஸ் நோய் எதிர்ப்பு மருந்து


உ

## திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஐப்பசி மாதம் 24-ஆம் திகதி இவறு 10-11-2001 சனிக்கிழமை முற்பகல் 10-35 மணிமுதல் 11-30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**விவேகா நகை மடம்**
**VIVEKA NAGAI MADAM**

என்னும் புதிய நகை வியாபார ஸ்தாபனத்தை இறைவன் துணைகொண்டு திறப்புவிழா செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்,

131, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

விவேகா நகை மாடம்
நியூ ராதிகாஸ் நகை மாளிகை
[C-2848]



வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.

## 2002ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

1. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 20.11.2001 நண்பகல் 12.00 மணிவரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 21.11 2001 நண்பகல் 12.00 மணிவரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 21.11 2001 பிற்பகல் 2 மணி.
4. கேள்விப் பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
5. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை இவ்வலுவலக கேள்விப் பெட்டியிலும், இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல. 29, செட்டித்தெரு, நல்லூர்'' என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

| குத்தகை விபரம் | கேள்விப்பத்திரப் பணம் (பொ.சே. வரி நீங்கலாக) | கேள்வி வைப்பு | ஆகக்குறைந்த தொகை (பொ. சே. வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்** | | | |
| 01. அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2,000.00 | 1,48,500.00 |
| 02. அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 150.00 | 500.00 | 22,000.00 |
| 03. வளலாய், தம்பாலை பொதுச்சந்தை | 50.00 | 100.00 | 660.00 |
| 04. அச்சுவேலி பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | 250 00 | 2,000 00 | 8,01,460.00 |
| **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| 01. புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 200.00 | 1,000 00 | 88,220.00 |
| 02. வாதரவத்தை மாட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 3,500.00 |
| 03. புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 150.00 | 500.00 | 13,200.00 |
| 04. ஆவரங்கால் மரக்கறிச் சந்தை | 100 00 | 250 00 | 1,540.00 |
| 05 புத்தூர் பொதுச் சந்தை | 150.00 | 500.00 | 12,430.00 |
| 06 ஆவரங்கால் மீன் சந்தை | 50 00 | 100.00 | 350.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்** | | | |
| 01. நீர்வேலி வடக்கு மீன் சந்தை | 100 00 | 250 00 | 3,500.00 |
| 02. நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 1,200.00 |
| 03. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 150 00 | 500.00 | 12,650.00 |
| **கோப்பாய் உப அலுவலகம்** | | | |
| 01. கோப்பாய் வடக்கு சந்தை | 100.00 | 250.00 | 7,865.00 |
| 02. கோப்பாய்வடக்குமாட்டிறைச்சிக்கடை | 150.00 | 500.00 | 37,512.00 |
| 03. இருபாலைச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 500 00 | 38,590.00 |
| 04. இருபாலை மீன் சந்தை | 100.00 | 250 00 | 2,200.00 |
| 05. இருபாலை சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250 00 | 2,475.00 |
| 06 கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2,475.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| 01. உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2,000.00 | 1,03,950.00 |
| 02. உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 150.00 | 500.00 | 30,470.00 |
| 03. ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 500.00 | 13,200.00 |
| 04. ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 4,000.00 |
| 05. உரும்பிராய் மத்திய சந்தை | 200.00 | 1,000.00 | 63,360.00 |

குறிப்பு; கேள்விப் பத்திரப்பணம், சித்திபெற்ற கேள்வித் தொகை என்பவற்றிற்கு 12.5% பொருள்கள் சேவைக்கான வரி செலுத்துதல் வேண்டும்.

பூ. குணசிங்கம், ஜே.பி.யு.எம்
தவிசாளர்.

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.

(சி 2846)

## இன்று ஒரு தகவல்

# இருவர் நிலையும் வேறு

வேட்டையாடும்பொழுது துணைசெய்யும் என்று வல்லூறு ஒன்றை வேடன்ஒருவன் வளர்த்து வந்தான் ஒருநாள் அந்த வல்லூறு தோட்டத்தில் மேய்ந்துகொண்டிருந்த சேவலைப்பார்த்து ''உங்களைப்போல நன்றிகெட்டவர்களை நான் பார்த்ததே இல்லை நல்ல உணவு உங்களுக்குத் தருகிறார்கள். உறங்குவதற்கு அருமையான வசதி செய்திருக்கிறார்கள். நரிகளிடமிருந்தும், பிற கொடிய விலங்குகளிடமிருந்தும் உங்களைக் காப்பாற்றுகிறார்கள். இப்படியெல்லாம் நன்கு கவனிக்கிற மனிதர்கள் உங்களை வா என்று அழைத்தால் ஓடி ஒளிகிறீர்கள். ஆனால் எங்களைப்பார், நாங்களும் உங்களைப்போல பறவைதான் உங்களுக்குச் செய்து தரும் வசதிகள் எவற்றையும மனிதர்கள் எங்களுக்குச் செய்து தருவதில்லை. இருந்தாலும் அவர்கள் அழைத்தவுடன் நாங்கள்செல்கிறோம்; வேட்டையில் நாங்கள் துணை நிற்கிறோம்.'' என்றது வல்லூறு.

'ஆமாம், நீ சொல்வது உண்மைதான் ஆனால் நீ எப்பொழுதாவது தோலுரிக்கப்பட்ட வல்லூறு ஒன்று எண்ணெயில் வறுக்கப்படுவதைப் பார்த்து இருக்கின்றாயா? ஆனால நாங்களோ, நூற்றுக்கணக்கான கொழுத்த கோழிகள் வறுக்கப்படுவதைப் பார்த்து இருக்கிறோம். மனிதர்கள் அழைத்தவுடன் நீ செல்கிறாய்; உனக்கு எந்தத் துன்பமும் ஏற்படாது. நாங்கள் சென்றால் என்ன ஆகும். கொதிக்கிற எண்ணெயில் வறுபட்டுச் சாவோம். சூழ்நிலைதான் ஒருவர் அருகில் செல்வதற்கும் அவரைவிட்டு ஒடுவதற்கும் காரணம் இதை உணராமல் எங்களை நன்றியில்லாதவர்கள் என்று பேசாதே'' என்று சூடாகப் ...தில் தந்தது சேவல். □

பேராசிரியர் எ. சோதி

# மெய்வண்ணம் 4 வது இதழ் வெளியீடு

[மந்திகை]

தென்மராட்சி வலயக்கல்வி சுகாதார உடற்கல்வி மன்றம் நடத்தும் 'மெய் வண்ணம்' நான்காவது இதழ் நூல்வெளியீட்டு விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் மன்றத்தலைவர் க. குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ இராசையாவும் வெளியீட்டுரையை தென்மராட்சி கல்வி வலய பணிப்பாளர் மு.வ. செல்வராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

[உ-23]

# இடமாற்ற சபை கூட்டம் இடம்பெறும்தினம்மாற்றம்

(யாழ்ப்பாணம்)

மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களுக்கிடையிலான ஆசிரிய இடமாற்றச் சபைக் கூட்டம் நடைபெறும் தினத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த மேற்படி கூட்டம் 19ஆம் திகதி திங்கட் கிழமை மு.ப10.00 மணிக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# மனிதத் தலையை நடு ஊருக்குள் நாய் இழுத்து வந்தது

(யாழ்ப்பாணம்)

கோம்பையன் மணல் மயானப்பகுதி உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாத நிலையில் அயல்பகுதி மக்களுக்குப் பெரும் இடைஞ்சல்களை ஏற்படுத்தும் நிலையில் காணப்படுவதாக தெரியவருகிறது

இந்த வகையில், அண்மையில் அரைகுறையாக எரிந்த நிலையில் மனிதத் தலை ஒன்றை நாய் ஊர்மனைக்கு இழுத்து வந்ததாகவும்,

இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி நிகழ வாய்ப்பிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (து)

# மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(வல்வெட்டித்துறை)

நல்லூர் நொதேர்ன் விளையாட்டுக்கழகம் நடத்தும் ''பரா-பரா'' வெற்றிக் கிண்ணத்திற்கான மென் பந்து கிரிக்கெட்போட்டியில் இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்று மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு;

காலை 8.30 மணிக்கு, வெற்றி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக் கழகமும்,

மு.ப. 10.00 மணிக்கு, அரியாலை ஐக்கியம் (பச்சை) விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கிங்ஸ்ஸ்டார் விளையாட்டுக்கழகமும்,

மு.ப 11.00 மணிக்கு, கொண்டலடி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிகொக்ஸ் விளையாட்டுக்கழகமும்,

பி.ப 1.30 மணிக்கு, ஜெற்லயின் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வை. எம். எச். ஏ. விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன

(செ-217)

# பட்டதாரிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியருக்கான விண்ணப்பம் கோரப்பட்டபோது விண்ணப்பித்தும், தற்போது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளை விண்ணப்ப நிராகரிப்பு கடிதப்பிரதியுடன்விபரங்களைசங்கஅலுவலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஒப்படைக்குமாறு யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

(உ)

# தற்போது வழங்கப்படும் மின்சாரத்தினால் எந்த பயனுமில்லையாம்

## பொதுமக்கள் அதிருப்தி

(நவக்கிரி)

தற்போதைய மின்சாரம் வழங்கும் நடைமுறை குறித்து பொதுமக்கள் தரப்பில்பலத்த அதிருப்தி நிலவுகின்றது.

பகல்நேரத்தில் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதனால் தமது முக்கிய கடமைகளை ஆற்ற முடியாதிருப்பதுடன்,

புதிய மின்வழங்கல் நடைமுறையினால் தமக்கு எந்தவொரு நன்மையும் கிட்டப்போவதில்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை, மின்சார சபையினரின் அறிவிப்புக்கு மாறாக சில இடங்களில் அதிக நேரம் மின்வெட்டு இடம்பெறுவதுடன், மின்சாரம் வழங்கப்படும் வேளையிலும் அடிக்கடி தடங்கல்கள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (உ-233)

# கிறிஸ்மஸ் கரோல் கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி செவிப்புலன், விழிப்புலன் அற்றோர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த கிறிஸ்மஸ் கரோல் கலைநிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி பீற்றோ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ

# விருது வழங்கி கௌரவம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கயாப்புச் சீரதிருத்தத்தில் சிறப்பாகப் பணியாற்றிய மைக்கால பேராசிரியர் வி சே. கணேசலிங்கத்திற்கு அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சங்கத்தின்வருடாந்தபொதுக் கூட்டத்தில் விருது வழங்கப்பட்டது,

இந்நிகழ்வில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு பேராசிரியரை பாராட்டிக் கௌரவித்தனர்;

[உ-106]

# பாதீனியம் விஷச் செடி மீண்டும் பல்கிப் பெருக்கம்

(வல்வெட்டித்துறை)

யாழ் குடாநாட்டின பல்வேறு பகுதிகளிலும் பாதீனியம் விஷச்செடி மீண்டும் பெருகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த காலங்களில் மேற்படி பாதீனியச் செடி பரவிக் காணப்பட்ட இடங்களில் அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும அந்நடவடிக்கை அரைகுறையில் கைவிடப்பட்டமையினாலேயே,

மழையைக் கண்டதும் அவை மீண்டும் துளிர்விட்டு வளர்ந்துள்ளன.

நீர்வேலி, கோப்பாய், இருபாலை வீதிபோரங்களில் பாதீனியச்செடி செழித்து வளர்ந்திருப்பதைக் காணக் கூடியதாய் உள்ளது

(உ-217)

# 2001ல் அரச செலவுகள் ரூ. 29.3மி. அதிகரிப்பு

(கொழும்பு)

நடப்பு வருடத்துக்குரிய வரவு-செலவுத்திட்ட பற்றாக்குறை இடைவெளி உத்தேச மதிப்பீட்டிலும் பார்க்க உயர்வடைந்துள்ளதுடன் அரச செலவுகள் கடந்த ஒகஸ் மாதம்வரை 84.1மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது,

அரச செலவுகள் அதிகரித்துச் செல்வதாக எச்சரிக்கப்பட்டுள்ளதுடன், கடந்த வருடம் 54.8 மில்லியனாக இருந்த செலவினம இவ்வருடம 29.3 மில்லியனால் அதிகரித்துள்ளது-

இத்தகைய செலவின அதிகரிப்பு நாட்டின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதிக்குமென்று பொருளியல் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்

இதேவேளை மேற்படிஅரச செலவினம் இவ்வருடம் அதிகரித்துச் சென்றமைக்கு கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் தாக்கப்பட்டமையும் அரசியல் ஸ்திரமின்மையுமே காரணமென மத்திய வங்கி தெரிவித்துள்ளது (இ)

# விழிப்புக்குழு அமைப்பு

(துன்னாலை)

கரவெட்டி, நெல்லியடிஅரசடிப் பகுதியில் திருட்டுச் சமபவங்கள அதிகரித்துள்ளதனையடுத்து இப்பகுதிஇளைஞர்கள் இராணுவத்தினரின் அனுமதியுடன் விழிப்புக்குழு வொன்றை அமைத்துள்ளனர். (செ-41)

## சிந்தனைக்கு விருந்து

### செல்வத்துட் செல்வம்

அளவாக உண்டும் அளவாய்ச் சுகித்தும்
அளவாகப் பிள்ளைகளைப் பெற்றும் - அளவாகச்
செல்வத்தைச் சேர்த்துமிகச் சீரறங்கள் செய்வதே
செல்வத்துட் செல்வமெனத் தேர்.

'பழையவன்'

## புலிகளின் ஆதரவை நிரூபிக்கும் வகையில்

# வன்னி சென்று பகிரங்க அறிக்கை வெளியிடக் கூட்டணி தயாரா?

## ஈழமணி இவ்வாறு கேள்வி

(யாழ்ப்பாணம்)

நான்குகட்சிகள் இணைந்து அமைத்த கூட்டு தேர்தலில் வெற்றி பெற்றுகதிரைகளைப் பிடித்துவிட வேண்டும் என்ற சுயலாப அரசியலுக்காக அமைக்கப்பட்ட சந்தர்ப்பவாதக் கூட்டேயன்றி மக்களின்நலன்களுக்காக அமைக்கப்பட்ட கூட்டு அல்ல. ஈ.பி.டி. பியின் அரசியல் பலத்தின் முன்னால் தனித்தனியாகப் போட்டியிட்டு தோற்றுவிடுவோமோ என்ற அச்சத்தின் காரணமாக அமைக்கப்பட்ட கூட்டு இது.

தமது கூட்டு வெற்றி பெறுவதை விட விருப்பு வாக்குகள் மூலம் தத்தமது வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக இலக்கங்களை முதன்மைப்படுத்திப் பிரசாரம் செய்கின்றார்கள். எனவே 6 ஆம் திகதி உடையப் போகின்ற ஓர் கூட்டுக்காக 5 ஆம் திகதி வாக்களித்து உங்கள் பொன்னான வாக்குப்பலத்தை வீணடிக்கப் போகின்றீர்களா?

இவ்வாறு சங்கானை நவீன சந்தை அடிக்கல் நாட்டு வைபவத்தில் சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றிய ஈழ மாணவர் பொது மன்றத்தின்முன்னாள் நிர்வாகச் செயலாளரும் ஈ.பி.டி. பியின் தேர்தல் பிரசாரகருமான மு. டேவிற்சன் (ஈழமணி) கேள்வியெழுப்பினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இது போன்ற கூட்டுகள் இன்று நேற்றல்ல 1977, 1989 இலும் ஏற்படுத்தப்பட்டன. 1977 இல் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி, சுயாட்சிக் கழகம் ஆகியன இணைந்து ஓர் கூட்டு அமைக்கப்பட்டு உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டனர்.

தமிழீழம் பெற்றுத் தருவோம என வாக்குறுதியளித்து தேர்தலில் அமோக வெற்றி பெற்றனர். பின்பு தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு ... ய வந்த ... தமிழக அரசு கொடுத்த வீடுகளில் சுகபோக வாழ்க்கை வாழ்ந்தனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கடந்த காலங்களில் சாதித்த அபிவிருத்திப் பணிகளையும், அரசியல் வேலைத்திட்டங்களையும் மக்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். எமது அபிவிருத்திப் பணிகளும் அரசியல் பணிகளும் மேலும் தொடர மக்களாகிய நீங்கள் வீணைச் சின்னத்திற்கு வாக்களித்து ஈ.பி.டி.பி. யினராகிய எம்மை வெற்றி பெறச் செய்யவேண்டும்.

இன்று உங்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்காக புலிகள் ஆதரவு தமக்கிருப்பதாக இவர்கள் நடிக்கின்றார்கள். உண்மையிலேயே புலிகள் ஆதரவு இவர்களுக்கு இருக்குமாயின் வன்னி சென்று இவர்கள் பகிரங்க அறிக்கை வெளியிட ... (...)

# அமெரிக்காவின் வஞ்சம்

உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியர்
அருந்ததி றோய் எழுதிய ஆங்கிலக்
கட்டுரையின் தமிழாக்கம்

(நேற்றைய தொடர்ச்சி)

## எதற்காக வஞ்சம் (2)

அமெரிக்காவின் இந்த யுத்தம் அமெரிக்காவில் உள்ள பயங்கரவாதத்திற்கு எதிரானதா அல்லது பொதுவாக உள்ள பயங்கரவாதத்திற்கு எதிரானதா? உண்மையில் எதற்கு இங்கே வஞ்சம் தீர்க்கப்படுகின்றது?

பரிதாபகரமாக மாண்ட 7 ஆயிரம் உயிர்களுக்காகவா? மான்ஹற்றனில் 5 மில்லியன் சதுர அடி அலுவலகம் அழிக்கப்பட்டமைக்கா? பென்டகனில் ஒரு பகுதி அழிக்கப்பட்டமைக்கா? அதில் பல நூறாயிரம் பேர் பதவி இழந்தமைக்கா? விமானக் கம்பெனிகள், வங்கிகள் நட்டம் அடைந்தமைக்கா அல்லது இவைகளைவிட அதிகமானவைக்கா?

## மடேலின் ஆல் பிறைற்

1996 ஆம் ஆண்டில் அப்போது அமெரிக்க அரசின் செயலாளராக இருந்த மடேலீன் அல்பிறைற் என்பவரிடம் தேசிய தொலைக் காட்சியில் அமெரிக்க பொருளாதாரத் தடையினால் ஈராக்கில் 5லட்சம் பிள்ளைகள் பலியானமை பற்றி என்ன கருதுகிறீர்கள் என்று வினவப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில் ''மிகவும் கடுமையான தேர்வு, ஆனால் எல்லா விடயங்களையும் நோக்கும் போது எமது விலைக்கு ஏற்ற பெறுமதி என்று நாம் நினைக்கிறோம்'' எனக் குறிப்பிட்டார். இப்படிச் சொன்னதற்காக அவர் என்றுமே பதவி இழக்கவில்லை.

அவர் அமெரிக்க அரசின் கருத்துக்களையும் அபிலாஷைகளையும் எடுத்துக்கூறும் பிரதிநிதியாக உலகெங்கும் பயணம் செய்தார். ஈராக்கிற்கான பொருளாதாரத் தடை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கின்றது பிள்ளைகள் இறப்பதும் தொடர்கின்றது என்பவை நாம் இங்கு கவனிக்க வேண்டிய விடயங்கள்.

## நாகரிகங்களின் மோதல்

எனவே, நாம் நாகரிகத்திற்கும், காட்டுமிராண்டித்தனத்திற்கும் குற்றம் அறியாத அப்பாவி மக்களின் கொலைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை அல்லது நாகரிகங்களின் ஒரு மோதலை; சொந்த பாரம்பரியங்களின் தாக்கங்களை இங்கே காணலாம்

இறந்த எத்தனை ஈராக்கியர்களால் உலகத்தை சிறந்த இடமாக மாற்றலாம்? இறந்த ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் எத்தனை இறந்த ஆப்கானியன்? இறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் எத்தனை பெண்களும் குழந்தைகளும், வங்கியில் வைப்புச் செய்த ஒவ்வொருவனுக்கும் எத்தனை இறந்த முஜாஹுதீன் தீவிரவாதிகள்?

தொலைக்காட்சியில் உலகெங்கும் காட்டப்படும் ''விடுதலைக்காக தொடர்ச்சியான யுத்தத்தைப்'' (Operation Enduring Liberation) பார்த்து அதன் வசமாகி விடுகிறோம்.

ஒஸாமா பின்லேடனுக்கு தலிபான் அரசு ஆப்கானில் பாதுகாப்பு அளித்து வைத்திருப்பதற்காக உலகின் அதிஉன்னத பலம் வாய்ந்த நாடுகள் உலகில் மிகவும் வறிய, அழிந்த யுத்தத்தால் சின்னாபின்னமான நாடான ஆப்கானை

## தமிழில்: கபிலர்

நெருங்கிச் சுற்றிவளைத்துள்ளன. ஆப்கானில் 'அந்நாட்டுப் பிரஜை' என்ற பெறுமதி ஒன்றைத்தான் அங்குகாண முடியும்.

அதில் அரை மில்லியன் காயப்பட்ட அநாதைகள். நேரடியாக வாகனங்கள் செல்லமுடியாத பின்தங்கிய கிராமங்களில் செயற்கைக் கை, கால்களை அந்த அங்கவீனர்களுக்கு விமானம் மூலம் போடும் போது அவற்றை எடுப்பதற்கு பெரிய ஜனநெரிசல் ஏற்படும்.

## கற்காலநிலை

ஆப்கான பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலேதான் உள்ளது. அந்த நாட்டை இராணுவம் கைப்பற்றுவதற்கு ஒரு வரைபடத்தை வைத்து திட்டம் தீட்டுவதற்கு பெரிய நகரங்களோ பெரிய நெடுஞ்சாலைகளோ அங்கு இல்லை வீதிப் போக்குவரத்திற்கு உதவியாக வழிகாட்டும் ஊர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கம்பங்கள், தொழில்பேட்டைகள், நீரைச் சுத்திகரித்து வழங்கும் இயந்திர அமைப்புக்கள் அவற்றுக்கான திட்டங்கள் எதுவுமே இல்லை விவசாய நிலங்கள் பெரிய இடுகாட்டு நிலங்களாக மாறி விட்டன.

ஆப்கானைக் கற்கால நிலைக்கு மாற்றுவதற்கு குண்டு போடுவதாக அமெரிக்காவில் முரட்டுத்தனமாகப் பேசப்படுகின்றது ஏற்கனவே ஆப்கான் கற்காலத்திலே தான் இருக்கிறது! ஆப்கான் எங்கே இருக்கிறது என்பதில் அமெரிக்கர்களுக்கு சிறிது தெளிவில்லாமல் இருக்கலாம். ஆனால் அமெரிக்காவும் ஆப்கானும் பழைய நண்பர்கள்.

1979 ஆம் ஆண்டில் ரஷ்யா ஆப்கானைக் கைப்பற்றிய போது அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறையும் (Central Investigation Agency) பாகிஸ்தான் உள்ளக புலனாய்வுச் சேவைகளும் (Inter Services Intelligence) வெளிக்குத் தெரியாத ஒரு பெரிய போரைத் தொடங்கின. அது அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறையின் வரலாற்றிலே பெரிய போராகும். சோவியத்திற்கு எதிராகவுள்ள ஆப்கானின் பலத்தையும் வேகத்தையும் தான் நெறிப்படுத்தி அதைப் புனிதப் போராக (ஜிகாத்) விரிவுபடுத்தினால் சோவியத்யூனியனிற்குள் இருக்கும் இஸ்லாமிய நாடுகள் சோவியத்யூனியனுக்கு எதிராகத் திரும்பி கம்யூனிச அமைப்பைச் சீர்குலைத்து விடும் என்பதே அதன் நோக்கம்.

## அமெரிக்க நிதிஉதவி

அது ஆரம்பிக்கப்பட்ட போது ஆப்கான் சோவியத் யூனியனின் வியட்நாமாக வேண்டும் என்று கருதப்பட்டது ஆனால் அதிலும் பார்க்க மோசமான நிலைக்கு ஆப்கான் மாறியது. அக்காலங்களில் பாகிஸ்தான் உள்ளக புலனாய்வுச் சேவைகளும், அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறையும் 40 இஸ்லாமிய நாடுகளிலிருந்து 1 லட்சம் முஜாஹுதீன் தீவிரவாதிகளை அமெரிக்காவால் தூண்டப்பட்ட யுத்தத்திற்கு படைவீரர்களாகத் திரட்டுவதற்கு நிதியை வழங்கி வந்தன. அமெரிக்கா எதிர்காலத்தில் தன்னை எதிர்த்து போராடவுள்ள யுத்தத்திற்குத்தான் அப்போது நிதியுதவி செய்தது

1989ஆம் ஆண்டு 10வருட கடூர யுத்தத்தின்பின் ரஷ்யா கற்களாகக் குறைந்து போன ஒரு நாகரிகத்தை ஆப்கானில் விட்டு தனது படைகளை வாபஸ் செய்தது.

(தொடரும்)

---

### தேர்தல் பிரசாரங்களுக்கு குந்தகம்

# மகேஸ்வரனும் டக்ளஸும் ஒருவர்மீது ஒருவர் மாறி மாறி குற்றம் சுமத்துகின்றனர்

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்டத்திற்கான முதன்மை வேட்பாளர் தி மகேஸ்வரன் தாங்கள் தீவுப்பகுதிகளுககு சென்று பிரசாரம் செய்ய முடியாமல் ஈ பி.டி.பி. யின் தொண்டர் அச்சுறுத்தியமை தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்திருந்ததை குறித்து லண்டன் பி.பி.ஸி. வானொலிக்கு அளித்த பேட்டி:

**கேள்வி**

தீவுப் பகுதியில் நீங்கள் பிரசாரம் செய்த பொழுது ஈ.பி.டி.பி தொண்டர்களிடமிருந்து விடுத்த அச்சுறுத்தல் குறித்து என்ன கூறவிரும்புகிறீர்கள்?

**பதில்**

உண்மையிலேயே நாம் தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் செய்த காலப்பகுதியிலிருந்து இன்றுவரை தீவுப்பகுதிகளான ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு போன்ற இடங்களுக்கு எம்மால் போக முடியாத நிலை உருவாகியுள்ளது. காரணம் அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட ஈ.பி.டி.பி தொண்டர்களும் இராணுவ கூலிப்படையினரும் முகமூடிகளுடன் உலாவித் திரிகிறார்கள்.

இவர்கள கறுப்புத்துணியால் வாயைக் கட்டியுள்ளதுடன் துப்பாக்கிகள், கிரனெட்டுகள போன்ற கனரக ஆயுதங்களை வைத்திருப்பதுடன் இலக்கத் தகடு அற்ற வாகனங்களில் நடமாடுகிறார்கள்.

அத்துடன் நாங்கள் வாகனத்தில பிரசாரத்திற்கு செல்லுகின்றவேளை இலக்கத் தகடு அற்ற வாகனங்கள மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றில் எம்மைப் பின் தொடர்கின்றனர்

இதேவேளை எமது கட்சிப் பிரசார போஸ்டர்கள் அனைத்தும் அங்கு மைஊற்றப்படுவதுடன் கிழித்தெறியப்பட்டுள்ளன

**கேள்வி**

மகேஸ்வரன் அவர்களே நீங்கள் அந்த தீவுகளுக்குச் சென்றீர்களா?

**பதில்**

ஆம், கடந்த நான்கு தினங்களுக்கு முன்பாக அங்கு சென்றிருந்தேன்.

**கேள்வி**

அப்பொழுது அங்கு சூழ்நிலை எப்படி இருந்தது?

**பதில்**

ஊர்காவற்றுறைக்கு நான் சென்றபொழுது அங்கு பிக்கப் வாகனத்திலும், மோட்டார் சைக்கிள்களிலும் வந்த கூலிப்பட்டாளங்கள எமது நடமாட்டங்களை நோட்டம் விட்டனர். இருந்தும் நான் அஞ்சவில்லை. ஏன் என்றால் ஸ்ரீலங்கா பொலிஸ் பாதுகாப்பாக இருந்தது. அத்துடன் பதினைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்களையும் எம்முடன் அழைத்துச் சென்றிருந்தோம்.

**கேள்வி**

அந்தப் பகுதியில் பொது மக்கள் என்ன மதிரியான உணர்வில் இருந்தார்கள்?

**பதில்**

பொதுமக்கள் மிகுந்த அச்சத்துடனேயே எம்முடன் உரையாடினார்கள். ஏன் என்றால் ஈ பி டி.பியின் தொண்டர்கள் அவர்களைக் கண்காணித்துக் கொண்டேயிருந்தனர்.

**கேள்வி**

இப்பொழுது யாழ்ப்பாண நிலைமை எப்படி இருக்கிறது.

**பதில்**

தேர்தல் பிரசாரங்களும் போஸ்டர்கள் ஒட்டுதலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி டி பி யினர் எமது பதாதைகளை கிழித்தெறிவதுடன் எரித்தும் வருகிறார்கள். யாழ் நகரின் பல பகுதிகளிலும் இவ்வாறே செயற்படுகின்றனர்.

இரவு பத்துமணிக்குப் பின்னர் துப்பாக்கியுடன் இலக்கத்தகடு அற்ற வாகனத்தில் சென்று இவர்கள் இவ்வாறு செயற்படுவதால் எம்மால் எதுவும் செய்ய முடியாதுள்ளது

இருந்தும் இது குறித்து நாம் பலாலி படைத்தளபதியுடனும் காங்கேசன் துறையிலுள்ள உதவிப்பொறுப்பாளருடனும் தொடர்புகொண்டு கதைத்தோம்.

ஆனால் அவர்கள் எவருமே இதற்கு ஒரு சட்டநடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை; அவர்களிடம் இதற்கு அதிகாரம் இல்லை; இதற்கு பின்னர் தான் நாம் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்திருக்கின்றோம்;

**கேள்வி:**

தேர்தல் பிரசாரம் குறித்து விடுதலைப்புலிகள் என்ன நிலையிலிருக்கிறார்கள்?

**பதில்:-**

விடுதலைப் புலிகள் இதுவரை எந்த வொரு கட்சிகளுக்கும் ஆதரவாகவோ எதிராகவோ செயற்பட்டதைக் காணவில்லை. அவர்கள் கடந்த தேர்தலில் கூட எந்த விதமான சாதக, பாதகமான செயற்பாடுகளில் பங்கு பற்றவில்லை.

### ஐ.தே.க. யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் தி. மகேஸ்வரன் கூறிய இக்கருத்துக்கள் குறித்து அமைச்சர் டகளஸ் தேவானந்தாவுடன் காணப்பட்ட செவ்வி;

**கேள்வி:-**

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் தி மகேஸ்வரன் உங்கள் கட்சி குறித்து கூறியவை பற்றி நீங்கள் கூற விரும்புவது என்ன?

**பதில்:-**

அவர் கூறியது அப்பட்டமான பொய். தீவுப்பகுதியில் சகல கட்சிகளினதும் தேர்தல் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

இது வெறும் தேர்தல் குற்றச் சாட்டு. தங்களுடைய தோல்விக்கான முன்கூட்டிய நியாயப்படுத்தலாகவே இக்குற்றச் சாட்டுக்களை எம்மீது சுமத்தியுள்ளனர்.

**கேள்வி:-**

டக்ளஸ் அவர்களே ஐ. தே க. மகேஸ்வரனுடன் நாங்கள் கதைத்த பொழுது அவர் தீவுப்பகுதியில் ஈ. பி. டி. பி. யின் தொண்டர்கள் ஆயுதங்களுடன் தங்களைப் பின் தொடர்ந்ததாகவும், தாங்கள் ஒட்டிய போஸ்டர்கள் மீது மைஊற்றியதாகவும் கூறினார்.

தேர்தல் சுமுகமாக நடக்கிறது என்றால் அந்த பொதுமக்களிடம் ஆயுதம் இருக்கவேண்டிய அவசியம் என்ன?

**பதில்**

ஏற்கனவே கூறியதுபோல இதுவும் அப்பட்டமான ஒரு பொய், தங்களுடைய எதிர்காலத் தோல்வியை நியாயப் படுத்துகின்ற ஒரு குற்றச்சாட்டே தவிர இதில் எவ்விதமான உண்மையுமில்லை;

**கேள்வி**

ஈ.பி.டி.பி: தொண்டர்களிடம் ஆயுதங்கள் இல்லை என்று கூறுகிறீர்கள்?

**பதில்**

ஆம், எங்களுடைய தற்பாதுகாப்புக்காக நாம் ஆயுதங்களை வைத்திருப்போமே யொழிய அவர்கள் கூறியது போல் வீதிகளில் எல்லாம் ஆயுதங்களை வைத்திருப்பதில்லை. மகேஸ்வரன் கூட தங்களுடைய அடியாட்களுடன் சென்று எங்களுடைய ஆட்களைத் தாக்கிய சம்பவங்களும் அங்கு இடம் பெற்றிருக்கின்றன. இது குறித்து பொலிஸில் கூட முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது;

**கேள்வி**

நீங்கள் இது குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டிருக்கின்றீர்களா?

**பதில்**

ஆம் கடந்த 8 ஆம் திகதி காலை தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டிருக்கின்றேன்; (செ)

இற்பிறந்தார் கண் அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணமும் ஒருங்கு

குறள்

# வலம்புரி

## பிரசாரத்தில் நாகாக்க

தேர்தல் காலங்களில் வாக்குறுதிகள் வழங்குவதில் வேட்பாளர்கள்முந்தியடித்து நிற்பது சகஜம் ஆனாலும் வழங்கப்படும் வாக்குறுதிகளில ஒருகுறிப்பிட்ட வீதத்தையாவது நிறைவேற்றும கடமைப்பாடு தமக்குண்டென்பதை வேட்பாளர் பெருமக்கள மறந்து விடுவது மக்களை -வாக்காளர்களை ஒரு பொருட்டாக மதிக்கவிலலை என்பதையே தெளிவுபடுத்துகிறது.தேர்தல் காலத்தில எப்படியும் பேசலாம் எப்படியும் பிரசாரம் செய்யலாம் எந்த வார்த்தைப் பிரயோகங்களையும் வெளி விடலாம் என்றெல்லாம் நினைப்பது வருங்கால எமது இளஞ்சந்ததியினரை- மாணவர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதுடன பெரியவாகளே இப்படியெலலாம் வார்த்தைப்பிரயோகங்களை வெளிப்படுத்தினால நாமும் அவ்வாறே செயறபடலாமென்ற உள்ளார்ந்த உணர்வு வெளிப்பட்டுவிடும். அதன் பின்னர்சமூகசீரழிவுகளே மிஞ்சும் இதனை உணர்ந்து வேட்பாளர்கள் தமது வார்த்தைப் பிரயோகங்களை மேறகொள்வது மிக மிக அவசியமாகும் இன்றைய இளஞ் சந்ததியினரின் நேரிய பயணம்பிறழ்வுறுவதுகண்டுதமிழ்க்கலாசாரத்தில பற்றுள்ள-மண் மீது பாசமுள்ளவர்கள் வேதனைகொண்டிருக்கும இவ் வேளையில் எதிர்காலத்தில் அரசியலின் தலைவர்களாக இருககப் போபவர்கள்தமது பிரசாரங்களை தர்க்கரீதியில் நியாயபடுத்துவதாக தாம் வெற்றியீட்டினால் யதார்த்தத்திற்கு அமைவாக முனனெடுக்கக் கூடிய, வேலைத் திட்டங்கள் குறித்து மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும்.

இதனை விடுத்து வேட்பாளர்களின் தனிப்பட்ட விடயங்களை முன்வைத்து முழங்குவதோ அன்றிசெய்யமுடியாத வேலைத் திட்டங்களை முன்வைத்து மாயை தோற்றத்தைக காட்டுவதோ தமிழ் மக்களின் நொருங்குண்ட உள்ளத்தைமேலும் உடைத்து விடுவதாகவே இருக்கும.

எனவேதேர்தல் பிரரசார நடவடிக்கையின் போது வெறுமனே வாக்குகளின எண்ணிக்கையில் மட்டும கவனம் செலுத்துவதோடு நின்று விடாமல் இளஞ்சந்ததியினரை பாதிக்காத வகையில் பிரச்சாரமொழிகளை பயன் படுத்துவதும் மிகமிக அவசியமாகும்.

திறனாய்வுக் களம்

# பாரம் பரியக் கல்விச் செல்நெறிகளையறிய

# “தமிழர் உளவியலும் கல்வியும்” நூல் உதவுகிறது

மொழி இன உணர்ச்சி என்பது தேசிய உணர்ச்சியின் உயிர்க் கூறு. குறித்த மொழியின் கலைகள், வெளியீடுகள், ஆய்வுகள் கல்வியினூடு வளர்ச்சியடைந்து ஏற்படுத்தும் விழிப்புடன் கூடிய பண்பாடேமொழியைநிலைக்கச் செய்யும நிலைப்பது மட்டுமன்றி சகல துறைகளிலும் வளர்ந்து செழிப்பதுதான் மொழிக்குப் பெருமை என்ற நோக்கை எய்தும் பொருட்டு பேராசிரியர் சபா.ஜெயராசா தமிழர் உளவியலும கல்வியும் என்ற நூலை எழுதியுள்ளார்.

| நூல்: | தமிழர் உளவியலும் கல்வியும் |
|---|---|
| நூலாசிரியர்: | பேராசிரியர் சபா. ஜெயராசா |
| வெளியீடு: | போஸ்கோ நல்லூர் |
| விலை: | ரூபா 100/= |

### தமிழர் மரபில் உளவியல்

உலகக்கல்விப்பாரம்பரியங்களில் தமிழர் கல்விப் பாரம்பரிய மரபுகள் மிகவும் உன்னதமானவை.இதில் உளவியல் கல்வியும் அடங்குகின்றது. இக்கல்வி சமூகத்தோடு மக்களை ஒட்டி உறவாட வைக்கும் உளவியற் செயல் முறை வாயிலாக முன்னெடுக்கப்பட்டது.சடங்குகளும், சமயமும், கலையாக்கங்களும் கல்வி உளவியல் இயல்பூக்க நெறிப்பாட்டைச் சமூககட்டமைப்புக் கேற்றவாறு கட்டியெழுப்பி வந்தன அவற்றின் மூலம சமூகம் விரும்பும்பழக்கவழக்கங்கள் உருவாக்கப்பட்டன. என்ற கருத்தியல்கள் நூலில் உதாரணங்களுடன் விளக்கப்படுகின்றன. பூர்வீக உணர்வுங்களை நெறிபபடுத்தல்,சொல்லறிவும் கையறிவும், குழூஉளவியல், உணர்வின் மீப்பெருக்க நிலை, சிரித்தல்.பயம , கனவுகள், உளப்பிணி என்றபல விடயங்களை நூலாசிரியர் ஆழமாகவும்.அழகாகவும் எடுத்தியம்புகின்றார்.

மனவெழுச்சியுடன் இணைந்த இயல்பூக்க வெளிப்பாடுகள வாழ்க்கையின் நீடித்தலுக்குப் பெறுமானத்தைக் கொடுககின்றன. இம்மனவெழுச்சியும், இயல்பூக்கங்களும் உடல்இயக்கங்களுடனும் உள்ளார்ந்த விசைகளுடனும் இணைந்து தொழிற்படுகின்றன. கோபம்,அச்சம், மகிழ்ச்சி, முதலாம் மனவெழுச்சிகளை நேரடியாக வெளிப்படுத்தாமல்; அடக்கல்,ஒடுக்கல், பரிமாற்றுதல்.தணிதல்முதலான தமிழர் கிராமிய உளவியல் மரபுகள் கல்வியின் வெளிப்பாட்டுடன் கூடிய காப்பரண்களாக இருந்துள்ளன;

இந்நிலை சமூகத்தினால் உருவாக்கப்பட்டும் நேரியஇயல்பூக்க நடத்தைகளை நெறிப்படுத்த உதவியது.இதன் வழியாக ஒருவரைக் குறிப்பிட்டுச் சுட்டும் கல்விச் செயறபாடு தமிழர் மரபிலே பின்பற்றப்பட்டது.தமிழ் இலக்கிய மரபிலேபுறத்திணை என்பது இவ்வகையிலேயே குறிப்பிடப்படுகின்றது. நற்செயல்களைப் பாராட்டும்பொழுது பெயர் சுட்டப்பட்டது.விரும்பத்தகாத எதிர்நடவடிக்கைகளைத் திருத்த முனையும் பொழுதும் பெயர் சுட்டிக் கூறப்பட்டது இவைமுறையே ‘தவப்பெயர்’ என்றும ‘அவப்பெயர்’ என்றும் கிராமிய மரபிலே கூறப்படுதல் தொடர்பானபலவிடயங்கள் நூலில் குறிப்பிடப்படுகின்றன.

### குடும்பத்தின் முக்கியத்துவம்

தமிழரின் சமூகவாழ்வின் முதன் நிலைக்குழுவாகக் குடும்பம் அமைகின்றது.மனித உறவுகள் குடும்பங்களின் அடிப்படையிலேயே நெறிப்படுத்தப்பட்டமையால் கிராமிய உணர்வுக் கல்வி என்பதிலும் குடும்ப உறவுமேலோங்கி இருந்தது குடும்பத்தின் தொழிற்பாட்டுப் பண்புகளுக்கு ஏற்றவாறு சமூகப் பணபாக்கம் சமூக விழுமியக் கல்வியாக்கம் முதலியவை முன்னெடுக்கப்பட்டன.குடும்பக்குழுவின் ஐக்கியம்,உணவு தேடுதல் முறைமை வழிபாட்டு முறைமை கூத்து போன்ற கல்விச் செயற்பாடுகளும் மீள வலியுறுத்தப்பட்டன.

கல்வியானதுமொழியாட்சி, தொழிற்திறன் கருவிக்கையாட்சி,ஒழுக்கம்நடத்தை உருவாக்கம் மனோபாவம்,விழுமியங்கள் என்ற ரீதியாக வளர்ச்சியடைய குடும்பமே அடிப்படைகளை ஏற்படுத்தியது.அத்தோடு விரிந்த குடும்ப அமைப்பின் பேரர்-பேரப்பிள்ளைகள்உறவு சமூகமயமாக்கலில் கூடிய வலிமையுடன் செயற்பட்டது:

### கிராமிய மரபில் அன்பு:

தமிழர் கிராமியக்கல்வி மரபை ஆழ்ந்து நோக்குகையில் ‘‘அன்பு சொரிதல்’’ என்ற பதம் பரந்த அளவிலே கையாளப்பட்டுள்ளது: அன்பைக் குறிப்பிடும்குறியீடுகளாக பச்சை வண்ணம், இனிப்புப்பண்டங்கள், பொங்கல், கொழுக்கட்டை,பனங்கட்டி, பால் முதலியவை அமைந்தன. மேலும பொருள் சார்ந்த பரிமாற்றத்துடன் மட்டுமல்லாது மீள் பலன் கருதாது வழங்கப்படுதலே அன்பு என்றும தமிழர் மரபிலே பல இலக்கிய ஆதாரங்கள் உண்டு என்பதையும் நூல் சுட்டுகின்றது. உளப்பிணிகளை நீக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட ‘‘அன்பு செய்தல்’’ என்ற தமிழர் மரபு வழிச் சிகிச்சை முறை நவீன உளவியல் கல்வியிலும் மீள வலியுறுத்தப்படுகின்றது. உளப்பிணிக்கான அடிப்படைக்காரணம் அன்புக் குலைவுஎன்றேமுன்னோர்கள் காரணம் கூறினர், இப்பிணியை நீக்க அன்பு, மகிழ்ச்சி நகைச்சுவை என்பவையே வழிகாட்டும்என்பதை உணர்த்துமபல ஆதாரங்களும் நூலில் குறிப்பிடப்படுகின்றன.

### கல்வியின் பன்முக வளர்ச்சி

தமிழர் மரபிலே கல்வியானது வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளுடனும இணைந்து இருந்தது. பல்வேறு பழைய இலக்கியங்கள், கூத்துக்கள், கலைகள் என்பவை தமிழர்களின் கல்வியின் உயர்வைச் சுட்டுகின்றன.

சமூகமாற்றமும், கல்விமாற்றமும் வளர்ச்சியடைய, கல்விச் செயல்முறைகளில் பல சிக்கல்கள் ஏற்பட்டன புதியவற்றை உருவாக்குதல் என்ற உளத் தொழிற்பாடு எவ்வாறு ஊக்கப்படுகின்றது. என்று சமூக உளவியலிலும், சமூக மானுடவியலிலும விரிவாக ஆராயப்படுகின்றது. புதியது என்பது;புதியகருவிகள், புதிய தளபாடங்கள், புதிய கட்டட அமைப்புகள். புதிய கலையாக்கங்கள்புதிய அணுகுமுறைகள் என்றவாறு பல வகைகளாகக் கொள்ளப்படுகின்றது புத்தாக்க உளவியல், தமிழர் மரபில் சிறுவர் கல்வியும் சிறுவர் அரங்கும் இலக்கியங்கள் வழியாகப்பண்டைத்தமிழர் கல்வியை அணுகுதல் என்றவாறு ‘‘தமிழர் உளவியலும் கல்வியும்’’ என்ற நூல்; தமிழர் தமபண்பாட்டுப் பாரம்பாரியங்களையும்,சமூகஉளவியல் கல்விச் செயற்பாடுகளையும் கண்டறியும் வழிகாட்டுதல்களை எடுத்துக் காட்டுகின்றது.

கல்வியியல்இலக்கிய ஆய்வுகள், அபிவிருத்தி வெளியீடுகள் பல்வேறு பிறதுறைகளுடன் ஒன்றிணைந்த ஆய்வுகளாகஅமைய வேண்டும் சமூகவியல், உளவியல், தகவல் தொடர்பியல், மொழியியல், அரசியல், வரலாறு, பண்பாட்டுமானுடவியல் போன்ற பல்துறைக்கல்வியியல்களுடன் தொடர்புபடுத்தியே ஆய்வு வெளியீடுகள் நிகழவேண்டுமென அபிவிருத்திசார் பின்நவீனத்துவகருத்தியலறிஞர்கள் எடுத்துக்கூறுகின்றனர். இதற்கிணங்க இந்நூல் ஆக்கப்பட்டுளளமை பேற்றக்கூடியதே;


பா. தனபாலன்
உப பீடாதிபதி
யாழ். தேசியக் கல்வியியற்கல்லூரி


## தினசரி தியானம்

## தற் போதம்

உள்ளும் புறமும் உவட்டாத ஆனந்தக்
கள்ளருந்தி நின்றதிலே கண்ணுற்றாய்
நெஞ்சமே!

**பட்டினத்தார்**

உலக வாழ்வு என்னும் தூக்கத்தினின்று பாரமார்த்திக வாழ்வு என்னும் விழிப்புநிலைக்குப்போவேனாக.

தூங்குபவனுடைய தரம் யாது என்று நமக்கு விளங்குவதில்லை. விழித்தான பிறகு அது நன்கு வெளியாகிறது. பாரமார்த்திக உணர்விலே விழித்து எழுந்திருப்பவனுக்குப் பெருவாழ்வு துவங்குகிறது. அவனுடைய செயல்களெல்லாம் அவனை மேன்மையின் கண் எடுத்துச் செல்வனவாகும். தெய்வப் பெற்றியேஅவன் பால் பொலிகிறது;

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# மக்கள் குறை நிவிர்த்தி சேவை இன்று ஆரம்பம்

(கொழும்புத்துறை)

மக்கள் குறை நிவிர்த்தி சேவையும்,மத்தியத்துறை மற்றும்மாகாண அமைச்சுக்களின் நடமாடும்சேவையும்இன்றும் நாளையும் காலை 8.30மணி முதல் 4 30மணி வரை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுளளது.

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு,புரைமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இச்சேவையில் விசேடமாக சீவல் தொழிலாளர்களுக்கானக்காப்புறுதிப பத்திரம் வழங்குதல்,மாணவருக்குப் புலமைப்பரிசில் வழங்குதல் மாணவர் காப்புறுதித்திட்டம் ஆரம்பித்தல் விவசாயிகள் ஒய்வூதியத் திட்டம் மீனவர்களுக்கான காப்புறுதித்திட்டம் போன்றவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது

மத்திய அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள்,வடக்கு, கிழக்கு மாகாண சபையின் செயலாளர்கள, திணைக்களத் தலைவர்கள் மற்றும் உயர்அதிகாரிகளும் இந்தச் சேவையில் பங்குகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது. (உ-223)

# வியாபாரம் சூடு பிடிப்பு மக்கள் முண்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

தீபாவளிப் பண்டிகைக்கு இன்னமும் 3 தினங்கள் இருக்கையில் யாழ் நகரில்தீபாவளி வியாபாரம் களைகட்டியுள்ளது.

தீபாவளி பண்டிகையை ஒட்டி யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி,மின்சார நிலைய வீதி பஸ்நிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகியவற்றில் நடைபாதை வியாபாரிகள தம் வியாபாரங்களை பெருமளவில் மேற் கொள்கிறார்கள்:

மேற்படி வீதிகளில் பெட்டிக்கடை வியாபாரிகள் வியாபாரம் செய்து வருவதால்அவ் வீதிகளில் மக்கள போக்குவரத்து நெரிசல் காரணப்படுகிறது. (ம)

என்னைக்

ஆனால் இவற்றுக்கெல்லாம் நான் பயந்து ஒதுங்கப் போவதில்லை என்றும் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். (வ)

அச்சுவேலி

அமைந்துள்ள கட்டடத்திற்கு முன்பாக கைக்குண்டு ஒன்று இருப்பதை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததையடுத்து.

அப்பகுதி பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், பொதுமக்களை பொலிஸாரும் இராணுவத்தினரும் சந்தைக்கு வழமையான பாதையூடாகச் செல்வதை தடுத்தனர்.

இதன் காரணமாக அச்சுவேலி நகரப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியதுடன் மக்கள் நடமாட்டமும் சொற்பமாகவே காணப்பட்டது.

இதேவேளை மேற்படி கைக்குண்டினைச் செயலிழக்க வைப்பதற்கான ஆயத்தங்களில் பொலிசார் ஈடுபட்டிருந்தனர். (உ-233)


சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும்

டொனால்ட் கணேசகுமார் நினைவு

துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி - 2001

50 ஓவர்களைக் கொண்டதும், யாழ்மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலானதுமான இச் சுற்றுப் போட்டிக்குரிய விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன.

விண்ணப்பமுடிவுத் திகதி:-11/11/2001

அணி ஒழுங்குத் தெரிவு:- 12/11-2001 பி.ப பகல் 5.00 மணிக்கு யா-மத்திய கல்லூரியில் நடைபெறும்.

குறிப்பு:-யாப்பு விதிமுறைக்கு மாறாக கூட்டப்பட்ட முறையற்ற பொதுக் கூட்ட முடிவு சட்டபூர்வமாக இயங்கும் எமது நடவடிக்கைகள் எதையும் கட்டுப்படுத்தாது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

சொ. விமலதாசன்
துடுப்பாட்டச் செயலாளர்
(கி-2859)

கு. பற்குணராஜா
கௌரவ பொதுச் செயலாளர்


## சுன்னாகத்தில் ஐ.தே.கட்சி இன்று பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று மாலை 3 மணிக்கு தி. மாசெல்வரசா தலைமையில் சுன்னாகம் சிவன் கோவில் முன்றலில் நடைபெறும்.

இதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் சிறப்புரையாற்றுவார். (ந)


வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு

செய்மதி மூலம் ஜனாதிபதி பதிலளிக்கிறார்

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ள மக்கள் குறைநிவிர்த்தி சேவையான வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ்விவகாரங்கள் அமைச்சின் நடமாடும் சேவையின் போது மாண்புமிகு ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் நேரடியாக மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க உள்ளார் இந்தநிகழ்ச்சி நண்பகல் பன்னிரண்டுமணி முதல் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது உங்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதியிடமிருந்து பதில் பெறும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

செயலாளர்

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு
புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு
தமிழ் விவகாரங்கள் அமைச்சு. (கி-2859)



ஓராண்டு நிறைவில் யாழ். நகரின் நவநாகரிக ஆடைகளின் மையம்

சுஜானாஸ் அன்ட் றெஸ்பொயின்ட்

தமது வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும் தமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு ஓராண்டு நிறைவையும் தீபாவளியையும் முன்னிட்டு ரூபா 5000 ற்கு ஆடைகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களை வழங்குகின்றனர். [சி-2858]




# பொதுத்தேர்தல் - 2001

# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்




தாயின் ஆட்சியில் தமிழ் மகாநாட்டுப் படுகொலைகள்
மகளின் ஆட்சியில் செம்மணிப் படுகொலைகள்
நீதிக்காகக் குரல் கொடுத்த குமாரும் படுகொலை செய்யப்பட்டார்
இவற்றை மறப்போமா? இல்லை மன்னிப்போமா?
தியாக மாமனிதர் சிந்திய இரத்தம் வீண்போகாது காப்போம்
அவர் பணிதொடர அவர் இலட்சியம் வெல்ல
நன்றி மறவாது கற்றவர் இவர்க்கே வாக்களிப்போம்.



திரு அ. விநாயகமூர்த்தி

இல 1



திரு .சி. வி.கே.சிவஞானம்

இல 5



திரு கஜேந்திரகுமார்
காங்கேசா பொன்னம்பலம்

இல 8

தமிழ்க் கூட்டமைப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணி



1 2 3 4 5 6 7 8 9 10 11 12

என்றுதணியும் எங்கள் சுதந்திர தாகம்

இல 1 இன் மேல் X இடுக இல 5 இன் மேல் X இடுக இல 8 இன் மேல் X இடுக

[3946]

குருநகர் வாழ் மக்கள்


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு நவம்பர் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.